# தேசிய கல்வி நிறுவகம்
## கல்விக் கணிப்பீடும் மதிப்பீடும் பற்றிய டிப்ளோமா கற்கைநெறி
## Diploma in Educational Assessment and Evaluation
(2025/2026)

தேசிய கல்வி நிறுவக பரீட்சைகள் துறையினால் நடத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

**கற்கைநெறியின் தன்மை**

இது பரீட்சைகள்/ சோதனைகள், திட்டமிடல், ஒழுங்கு செய்தல், வினாப்பத்திரம் தயாரித்தல், விடைத்தாள் மதிப்பீடு செய்தல், பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடும், கல்வித்துறை அதிகாரிகளுக்கு முக்கியமான, இலங்கைத் தகுதிகள் சட்டத்தின் (Sri Lanka Qualification Framework) மூன்றாம் மட்டத்தைச் (SLQF Level 03) ஒரு கற்கை நெறியாகும்.

**கற்கைநெறி உள்ளடக்கம்**

1. அளவீடு, கணிப்பீடு, மதிப்பீடு ஆகியவற்றின் பிரயோகம் (Appllications of Measurement, Assessment and Evaluation)
2. சோதனைகள் தயாரித்தலும் பகுப்பாய்வு செய்தலும் (Test Constructions and Analysis)
3. சோதனை / பரீட்சை நிர்வாகம் (Test Administration)
4. கணிப்பீட்டு, மதிப்பீட்டுக் கருவிகள் தயாரித்தல் (Developing tools for Assessment and Evaluation)
5. கல்விப் புள்ளிவிவரலையும் புள்ளிவிவரவியல் மென்பொருள்களையும் பயன்படுத்தல் (Practices of Educational Statistics and Statistical Software)

**தேவையான தகைமைகள்**

1. க.பொ.த. உயர்தர பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்

**அத்தோடு**

2. அரச சார்ந்த /அரச தனியார் /சர்வதேச பாடசாலையொன்றில் / பிரிவெனாவொன்றில் அல்லது வேறு கல்வி நிறுவனமொன்றில் ஆசிரியராக இருத்தல்.

**அல்லது**

அரச சார்ந்த /அரச தனியார் /சர்வதேச பாடசாலையொன்றில் / பிரிவெனாவொன்றில் அல்லது வேறு கல்வி நிறுவனமொன்றில் அதிபராக இருத்தல்

**அல்லது**

இலங்கைக் கல்வி நிருவாக சேவை ஆசிரிய ஆலோசகர் சேவை அதிகாரியாக இருத்தல்
அல்லது இலங்கைக் கல்வியிலான சேவையை அல்லது தேசிய கல்வி நிறுவக கல்விசார் பணியைச் சேர்ந்த ஓர் அதிகாரியாக இருத்தல்.

**அத்தோடு**

2024.12.31 ஆம் திகதியன்று வயது 50 வருடங்களிலும் குறைவாக இருத்தல்

| | | |
|---|---|---|
| **காலவரையறை** | : | இது ஓர் ஓராண்டுக்கற்கை நெறி ஆகும் (வார இறுதி, பாடசாலை விடுமுறை நாட்கள்) |
| **மொழி மூலம்** | : | தமிழ் / சிங்களம் |
| **விரிவுரைகள்** | : | 75% மானவை நேர்முக அமர்வுகளையும் (Contact Session) 25% நிகழ்நிலையிலும் (Online) நடத்தப்படும். |
| **தெரிவுசெய்யும் முறை** | : | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடத்தி அல்லது எழுத்துப் பரீட்சையும் நேர் முகப் பரீட்சையும் நடத்தி உச்ச தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளோர் தெரிவு செய்யப்படுவர் |
| **கற்கை நெறிக்கட்டணம்** | : | ரூபாய் 50,000/= |
| **பதிவுக்கட்டணம்** | : | ரூபாய் 2000/= |
| **விண்ணப்பக்கட்டணம்** | : | ரூபாய் 1200/= (மீளளிக்கப்படமாட்டாது) (இவைதவிர இறுதிப்பரீட்சைக்காக உரிய பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டும்) |

**விண்ணப்பிக்கும் முறை**

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள்

- தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் துறையின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் https://www.exams.nie.lk/intakes/new பிரவேசித்து, நிகழ்நிலை ஊடாக மாத்திரம் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும். நிகழ்நிலையில் விண்ணப்பத்தை அனுப்புதல் தொடர்பாகத் தேவையான அறிவுறுத்தல்களைப் பின்வரும் இணைய இணைப்பினூடாகப் பெறலாம். (https://www.exam.nie.lk/info/applying-for-new-enrollments)

- இறுதியாக, பூர்த்தி செய்த விண்ணப்பத்தைத் தரவிறக்கம் செய்து (download) அதிபர் / வலயக் கல்விப்பணிப்பாளர் / நிறுவனத் தலைவரின் விதந்துரைப்புடன் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் பெறத்தக்க தேசிய கல்வி நிறுவக பணவைப்புச் சிட்டையைப் பயன்படுத்தி ரூபாய் 1200/= பணத்தை வைப்புச் செய்து அப்பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தில் ஒட்டி உங்களது பெயர் முகவரி எழுதப்பட்ட ரூபாய் 110.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9''X4'' அளவுடைய ''**கடித உறையொன்றுடன், கற்கை நெறி இணைப்பாளர், பரீட்சைகள் துறை, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம எனும்**'' முகவரிக்கு **2024 திசெம்பர் 31** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், **DEAE -2025/2026** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

## விண்ணப்பம் அனுப்ப வேண்டியமுறை

1.0 விண்ணப்பப்பத்திரம் பூர்த்தி செய்ய வேண்டிய விதம்: https://www.exams.nie.lk/intakes/new வலைத்தளத்தில் பிரவேசித்து (Sign up) உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யுங்கள். Sign up தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்களைப் பின்வரும் இணைப்பு மூலம் பெறலாம். https://www.exams.nie.lk/info/register-as-a-user பயனர் இலக்கத்தை (User ID) குறித்துக் கொள்ளுங்கள். தேவையான எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக கடவுச் சொல்லை (Password) நினைவில் வைத்திருங்கள்.

2.1 உங்களைப் பற்றிய தகவல் படிவத்தை (User Profile)) இற்றைப்படுத்துங்கள் (Update)

- தனிப்பட்ட தகவல்கள்
- சேவைத் தகவல்கள்
- கல்விசார், தொழில்சார் தகைமைகள்

2.2 பின்னர் https://www.exams.nie.lk/newintakes **Diploma in Educationl Assessment and Evaluation 2025/2026** கற்கைநெறியைத் தெரிவு செய்யுங்கள்.

2.3 பின்னர் **My application** ஐத் தெரிவு செய்யுங்கள். தகவல்களை சரியாகப் புகுத்தி அவற்றை மீளப் பரிசீலித்த பின்னர் விண்ணப்பத்தை அனுப்புங்கள். (தேவையான அறிவுறுத்தல்களைப்) பின்வரும் இணைப்பு மூலம் பெபறலாம். https://www.exams.nie.lk/applying-for-new-enrollments

2.4 உங்களுக்குக் கிடைக்கும் விண்ணப்ப தொடர் இலக்கத்தை **(Application Reference Number)** குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

3.0 விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்தல். **(Download Application)**

நிகழ்நிலை **(Online)** விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்த பின்னர், உங்களது தொடர்பு இலக்கத்துடன் **(Reference Number)** கிடைக்கும் விவரங்கள் அடங்கிய பிரதியை அச்சுப்பதித்து அதனை நிறுவனத் தலைவரைக் கொண்டு உறுதிப்படுத்தி, விண்ணப்பத்துக்காகப் பணம் செலுத்திய சிட்டையின் மூலப்பிரதியுடன் பின்வரும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சேர்த்து, பணிப்பாளர். பரீட்சைத் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், மஹரகம எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

1. கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தர பெறுபேற்றுச் சான்றிதழ்.
2. நியமனக் கடிதம்
3. சேவைச் சான்றதழ்
4.

உங்களது மேற்படி ஆவணங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **DEAE 2025 / 2026 (சிங்களம்** / தமிழ்) எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

4.0 மேலதிக விபரங்களுக்காக, சிங்கள மொழி மூல இணைப்பாளர் திரு. E.M.Y சகித் (0117601693) அவர்களையோ, தமிழ் மொழிமூல இணைப்பாளர் திருமதி. P.A ஹேரத் (0117601767) அவர்களையோ, தொழினுட்ப உதவிகளுக்காக திரு. மாதவ தென்னக்கோன் அவர்களையோ 01176001777 / 0117601776 தொலைபேசி இலக்கங்களினூடாக வார நாள்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 வரையில் அழைக்கலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி 2024.12.31 ஆகும்

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.